உலகத் தமிழர்களே ஒன்றுபடுக!

# உலகத் தமிழர் குரல்

ஆசிரியர்: குரும்பசிட்டி இரா. கனகரத்தினம்

விலை சதம்: 50

''உலகத் தமிழர் குரல்''
வழி நடத்தல் குழு:—

- பிரான்ஸ்: திரு. அரிமாவளங்கோ
- இந்தோனேசியா: திரு. ராமுலு
- பீசி: திரு. க. அப்பாப்பிள்ளை
- தென்னாபிரிக்கா: திரு. மு. அன்பன், திரு. சோதிநாதன்
- தமிழ் நாடு: திரு. இளந்தமிழன்
- மொறிசியசு: திரு. அ. புட்பரதம்

குரல்: 1 | தி. பி. 2006, வைகாசித்திங்கள் — மே 1975 | ஒலி: 12

## உலகத் தெலுங்கு மகா நாட்டில் எங்கள் ராமுலு!

சென்னை
25-4-75

அன்பார்ந்த நண்பர்
கனகரத்தினம் அவர்களுக்கு!

வணக்கம்! யான் இந்த மடலை இந்தியாவில் (தமிழ் நாட்டில்) இருந்துகொண்டு வரைகிறேன்.



தமிழ்த்திரு சிறீ ராமுலு

உலகத்தெலுங்குமொழி மகா நாடு இந்தியாவில், ஆந்திர மாநிலத் தலை நகரான ஹைதராபாத்தில், கடந்த 10-4-75 தொடக்கம் 23-4-75 வரை நடைபெற்றதைப்பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்களென நம்புகிறேன். இந்த மகாநாட்டுக்கு இந்தோனேசியாவைப் பிரதி

(2-ம் பக்கம் பார்க்க)

## மலேசியாத் தமிழ்ப்பள்ளி மாணவர் கல்வி வளர்ச்சிக்காக

# ஒரு கோடி வெள்ளி நிதி!


### "தமிழ் நேசன்" இதழின் முன்மாதிரி!

மலேசியா தமிழ்ப் பள்ளிகளில் பயிலும் பல்லாயிரக் கணக்கான தமிழ் மாணவர்கள் கல்வி மேம்பாட்டுக்காக ஒரு கோடி வெள்ளி நிதி திரட்டும் புனிதப் பணியில் இறங்கியிருக்கிறது மலேசியா விருந்து வெளிவரும் தமிழ்த் தினசரியான தமிழ் நேசன் ஏடு! 1924 ம் ஆண்டு, மலேசியாத் தமிழர்களின் நலனைக் கண் காணிக்கும் இலட்சிய நோக்குடன், பெரியார் நரசிம்மனால் ஆரம்பிக்கப்பட்ட இப்பத்திரிகையின் இன்றைய ஆசிரியர் திரு. முருகு. சுப்பிரமணியன், எ. எம். என். அவர்களாகும். மாணவர்க்கான போக்குவரத்து வசதி, மதிய உணவு, சீருடை சப்பாத்து மற்றும் பாடசாலைத் துணைக் கருவிகள், புத்தகங்கள் வழங்கப் பயன்படுவதோடு, தமிழ்க் குழந்தைகள் தேசிய மொழி, ஆங்கில மொழிகளில் சிறப்பான கல்வி பெறவும் இந்த நிதி பயன் படுத்தப் படும் என விளக்கப் பட்டுள்ளது. இது தொடர்பாக அப் பத்திரிகையின் 30-3-75 ஆசிரியத் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

''தமிழ் நேசன் தொடங்கியிருக்கிற தமிழ்ப்பள்ளி மாணவர் உதவி நிதிக்கு நாடு முழுவதும், சமுதாயத்தின் எல்லாப் பிரிவினரிடமிருந்தும் கிடைத்து வருகிற பெருமித ஆதரவு பெரிதும் உற்சாக மூட்டுவதாக இருக்கிறது! சமுதாயத்தின் வரலாற்றில் இந்த உதவி நிதி மகத்தான புதிய திருப்பமாக அமைந்து, சமுதாயத்தின் அந்தஸ்தையும் கம்பீரமாக உயர்த்துமென்று பெரு நம்பிக்கையோடு எதிர்பார்க்கிறோம்.

தமிழ்ப் பள்ளிகளில் பயில்கின்ற எல்லாப் பிள்ளைகளின் பிரகாசமான எதிர்காலத்துக்கும் உத்தரவாதமளிக்கின்ற நிலையில் இந்த நிதி பயன்படுத்தப்படுமென்று உறுதி கூறுகிறோம். இந்த நிதிக்குச் சமூகம் அளிக்கின்ற உறுதியான ஆதரவு, நமது தேசியக் கல்விக் கொள்கைக்

(கடைசிப் பக்கம் பார்க்க)



### மா. பொ. சியின் மணிவாக்கு!

நசுக்கப்படும் தமிழர்கள் இலங்கையில் மட்டுமல்ல, உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும், அது நரகமாயினும்சரி, தமிழகத்தின் ஆதரவு அவர்களுக்கு என்றும் இருக்கும். இதை அழுத்தம் திருத்தமாகக் கூறி வைக்க விரும்புகிறேன்.

# தமிழன் எனத் தன்னை ஒப்புக்கொள்ள மறுத்த தமிழன்

S. சபாபதிப்பிள்ளைஅவர்கள் (லண்டன்)

நான் உத்தியோகம் பார்த்த காலத்தில் ரினிட்டாட்டிலிருந்து வந்த ஒருவரைச் சந்தித்தேன். அவரைச் சந்திப்பதற்கு முதல் நான்இந்த ரினிட்டாட் தமிழரைப் பற்றி, ஒரு ஆங்கிலேயர் மூலம், அவர் ஒரு இந்தியர் என்றும் பெயர் சின்னண்ணன் என்றும் கேள்வியுற்றிருந்தேன். மறுநாள் மூதாதையர் தமிழ் நாட்டிலிருந்து ரினிட்டாட்டுக்கு குடிபெயர்ந்தவர்களாக இருக்கவேண்டுமென்று கூறியபோது "அது எப்படி உங்களுக்குத்தெரியும்?" என என்னையே திருப்பிக்கேட்டார். நான் கூறியதை நம்ப மறுத்த அவரிடம் இலங்கைக்கும் தென்னாபிரிக்கா போன்ற நாடுகளுக்கும் சென்று குடியேறிய தமிழர்கள் பலருக்கு இப்பெயர் இருக்கிற

திரு. S. சபாபதிப்பிள்ளையவர்கள் ஒரு சிறந்த சட்டமேதையும் தமிழ் அறிஞருமாகும். ஒரு இலங்கையரான அவர் பிரிட்டனில் நிரந்தரமாக வசிக்கச் சென்ற பின் 'சீமைத்துரைகள்' எனத் தம்மை எண்ணி இன உணர்ச்சியற்று வாழ்ந்து கொண்டிருந்த லண்டன் தமிழரிடையே தமிழ் சுடரை ஏற்றி வைத்தவர். பிரிட்டன் இந்து மா மன்றத் தலைவரும் இந்து நிறுவனங்களின் ஒன்றியத் தலைவருமான அவர் தாம் கடமை பார்த்த காலத்தில் சந்தித்த ரினிட்டாட் தமிழர் ஒருவர்பற்றி இங்கு விபரிக்கிறார்.

நான் அவரைச் சந்தித்தபோது எனது சந்தேகம் உறுதியாகியது. அந்தப்பிரமுகர் அசல் திராவிடரின் தோற்றத்தையும் நிறத்தினையும் கொண்டிருந்தார். அவரை வற்புறுத்தி விசாரித்தபோது தமது மூதாதையரைப் பற்றி எதுவும் தமக்குத் தெரியாதென்றும் ஆனால் தான் ஒரு இந்தியவம்சாவளியினராக இருக்கலாமென்றும் கூறினார் நான் அவரது தெனவும் சின்னண்ணன் என்றால் சிறிய சகோதரன் என்று அர்த்தம் எனவும் விளக்கினேன். அவர் இதனை ஏற்க மறுத்துவிட்டதோடு தாம் தம்மகனின் உயர்கல்விக்காக ஆங்கிலமொழி கற்பிப்பதாயும் கூறினார். அசல் ஆங்கிலேயர் போல் காணப்பட்ட அவரிடம் தமிழர்களின் நடை உடை பாவனைகள் எதையுமே காண என்னால் முடியவில்லை.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## தெலுங்குமொழி மகாநாட்டில் சிறீ ராமுலு....

நிதித்துவப் படுத்தி நான் இங்கு வந்துள்ளேன். சோவியத் ஒன்றியம் அமெரிக்கா போன்ற நாடுகள் உட்பட, உலகத்தின் பல நாடுகளிலிருந்து ஏராளமான பிரதிநிதிகள் இம் மகாநாட்டுக்கு வருகை தந்திருந்தார்கள். ஆந்திர மாநிலக் கல்வி அமைச்சரிடமிருந்து நேரடியாக அழைப்புக்கிடைத்ததோடு, போக்குவரத்துக்கான செலவையும், இதர பல செலவுகளையும் அவர்களே ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்திருந்தனர்.

10-4-75 பாரதத்துக்கு வந்து சேர்ந்த நாம் 23-4-75 மகாநாடு முடியும் வரை ஓய்வு ஒழிச்சலின்றி இதில் பங்கெடுத்துக்கொண்டோம். வெளி நாடுகளிலிருந்து வந்த பிரதிநிதிகள் எல்லாரையும் சந்திக்கவும் அந்தந்த நாட்டில் நம் தமிழர் நிலைமையைத் தெரிந்து கொள்ளவும் இந்த மகாநாடு பெரி

(கடைசிப் பக்கம் பார்க்க)

## மலேசியச் செய்திச் சிதறல்கள்!

### மலேசியாத் தமிழ் இனத்தின் தலைவர் பதவி!

ம. இ. கா. தேசியத்தலைவர் பதவிக்கு டான்சிறீ வெ. மாணிக்கவாசகனார் அவர்களை, எவ்வித எதிர்ப்புமின்றி ம. இ- கா. உறுப்பினர்கள் மறுபடியும் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று தெலுங்கான் சான் சுங்க ரூபா கிளை தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்து நிறைவேற்றியுள்ளது. திரு. மாணிக்கவாசகனார் தேசியத்தலைவர் பொறுப்பேற்றபின்னர் இன நலனுக்கான பல அரிய சேவைகளைச் செய்துவரும் இவ் வேளையில் ஏகமனதாக மீண்டும் அவரைத் தெரிவு செய்து அவர் கரங்களுக்கு வலுவூட்ட வேண்டுமென்று கிளையின் தலைவர் திரு. க. இராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

### மலேசியாவின் முதல் தமிழ்ப் படம் தயாராகிறது!

மலேசியா நாட்டிலே மலேசியக் கலைஞர்களை மட்டும் கொண்டு உருவாக்கப்படும் முதல் தமிழ்ப் படம் 'துன்பங்கள் உறங்குவதில்லை' என்பதாகும். இதற்குமுன் 'இரத்தப்பேய்' என்ற படம் தயாரிக்கப் பட்டதாயினும் இதன் படப்பிடிப்புக்கள் அனைத்தும் தமிழகத்திலேயே நடைபெற்றன. 'துன்பங்கள் உறங்குவதில்லை' யென்ற இப்படத்துக்கான வசன, ஒலிப்பதிவு வேலைகள் இப் பொழுது மலேசியாவில் மும்முரமாக நடைபெற்று வருகிறது!

### ★ சிங்கப்பூர் தமிழர் முன்னேற்றம்!

கேள்வி: நமது நாட்டில் தமிழர்கள் முன்னேற என்ன செய்யவேண்டும்?

பதில்: இது போன்ற கேள்விகளைக் கேட்டுக் கொண்டிராமல் செயலில்இறங்கவேண்டும். ஆமாம்! தமிழர்கள் முன்னேற வில்லை யென்று யார் சொன்னது? சிங்கப் பூரிலுள்ள எல்லா இனத்தவரையும் போன்று நம் தமிழர்களும் முன்னேறித்தான் இருக்கிறார்கள்.

—தமிழ்மலர் (சிங்கப்பூர்) 30-3-75

### ★ சிங்கப்பூரிலும் தமிழ்க் கொலை!

கேள்வி: நமது சிங்கப்பூர் பஸ்களில் புகைபிடித்தல் "கடாது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதே! இதை யாரும் கவனத்தில் கொண்டதாகத் தெரியவில்லை. இப்படித்தான் தமிழ்க் கொலை செய்வதா?

பதில்: இது ஒன்றுதான் உங்கள் கண்ணில் பட்டதா? அரசாங்க அறிவிப்புப் பலகைகளில் கூட இதைவிடப் படுபயங்கரமான பிழைகள் காணப்படுகின்றன. இதை யார் கவனிப்பது என்பது தான் பிரச்சினை!

—தமிழ் மலர் (சிங்கப்பூர்) 30-3-75

உலகத் தமிழர் குரல் சம்பந்தமான கடிதங்களுக்கு:

இரா. கனகரத்தினம்,
49, கொழும்பு வீதி,
கண்டி.
இலங்கை.

R. KANAGARATNAM
49, Colombo Street,
KANDY.
Ceylon.

# கம்போடியாவில்

## தமிழ்ப் பண்பாட்டின் செல்வாக்கு!



(பீரங்கிகள் ஓய்ந்து அமைதி பெற்றுவிட்ட கம்போடியா நாட்டில் தமிழர் பண்பாட்டுச் சிதறல்களைப் படம்பிடித்துக்காட்டுகிறார் தமிழ் முனிவர் வண. தனிநாயக அடிகளார்.)

கிமேரர் என்பவர்கள் இன்றையக் கம்போதியாவின் தென்பாகத்தில் ஒருகால் அரசு புரிந்து வந்தவர்கள். இந்தியாவிலிருந்து சென்ற இளவரசனொருவன் பெரும் தெய்வ நாகமொன்றின் புதல்வியை மணஞ்செய்து அரச வரிசையைத் தோற்றுவித்ததாகக் கம்போதியாவின் பழங்கதைகள் கூறும். இக்கதையும் இன்னோரன்ன பிறகதைகளும் கம்போதியா, இந்தியாவிலிருந்து சமயத்தையும், அரசியல், கலை, கல்வி முதலியவற்றையும் பெற்றதென்று புலப்படுத்துகின்றன. அந்தக் காலத்தில் தென் கம்போதியாவும் தென்வியட்நாமும் இந்தோனீசியாவும் சிறப்பாகத் தென்னிந்தியாவுடன் நெருங்கிய கலைப்பண்பாட்டுத் தொடர்புகள் கொண்டிருந்தனவென்றும், பிற்காலத்தில் தான் சீனப் பண்பாட்டை ஏற்றனவென்றும் அறியவருகின்றோம். கம்போதியா உச்சநிலை அடைந்த காலம் கிமேரரெனும் இனத்தவர் பேரரசு நிறுவிய காலம் தான்.

கிமேரருடைய பண்பாட்டிற்கும் கலைகளுக்கும் இந்தியப் பண்பாடும் கலைகளுமே அடிப்படையாக இருந்தன. கிறித்துவ சகாப்தத்தின் முதல் நூற்றாண்டிலேயே பொதுவாக இந்தியாவுடனும் சிறப்பாகத் தென்னிந்தியாவுடனும் தென் கிழக்கு ஆசிய நாடுகள் யாவும் தொடர்பு கொண்டிருந்தன. இந்திய மக்களுள் சிறப்பாகத் தமிழ் வணிகரும் கப்பலோட்டிகளும் இந்நாடுகளுக்குச் சென்று பண்டமாற்று வாணிகம் செய்து வந்தனர். இவ்வணிகர், சென்ற துறைமுகங்களில் குடியேறித் தம்மில்லங்களையும் கோவில்களையும் நிறுவினர். இந்நாடுகளின் மாந்தரும் வெளிநாட்டுத் தொடர்பினை வரவேற்றனர். எனவே இந்தியாவின் சமயங்களாகிய சைவத்தையும் வைணவத்தையும் புத்த மதத்தையும் போதிக்கும் பெரியாரையும் வரவேற்றனர். இந்தியவானநூல், கணிதம், சிற்பம், இலக்கியம் முதலிய கலைகளைக் கற்றறிந்தனர். அரசர் தம் மாளிகைகளிலும் கோயில்களிலும் பிராமணரைக் குருக்களாகவும் அமைச்சராகவும் அமைத்தனர். இந்திய அரச குடும்பங்களில் கம்போதிய அரசர் பெண் கொண்டித்தலும் கூடும். வடமொழியை வழிபாட்டிற்கும் கல்வெட்டுகளுக்கும் நன்றாகப் பயன்படுத்தியும் வந்தனர். எனவே, இந்நாடுகள் அனைத்தையும் ''பரந்த இந்தியா'' (Greater India) என்று கூறுவது ஒருவாறு பொருந்தும். ஆயினும் இக்காலத்தில் விடுதலை பெற்று இனப்பற்றும் நாட்டுப் பற்றும் மிஞ்சிய இந்நாடுகளின் மாந்தர் சிலர், இந்தியப்பண்பாடு தம் நாட்டுப் பண்பாட்டிற்குத் துணையாக இருந்தது எனும் கருத்தை எளிதில் ஏற்பதில்லை. இந்தியாவிற்கோ வேறெந்த நாட்டிற்கோ கடமைப்பட்டிருப்பது தம் புகழுக்கு ஒருவாறு இழுக்கென்று இவர்கள் கருதுதல் கூடும். நேரு முதலிய இந்தியர் இந்நாடுகளுக்குத் தூது சென்ற காலத்தில் 'பரந்த இந்திய'க் கொள்கையை வலியுறுத்தியதைக் கம்போதியா, வியட்நாம் போன்ற நாடுகளின் செய்தித்தாள்கள் பெரிதும் எதிர்த்தன. நாட்டுப் பற்றும், அரசியல் வாதமும் வரம்பு கடந்து மிஞ்சினால் உண்மையும் புறக்கணிக்கப்படும் என்பது வெளிப்படை.

கிமேரர் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு சமயங்களைத் தழுவினர். சைவமும் வைணவமும் அரச குடும்பங்களில் பலகாலமாகத் தழுவப் பெற்று வந்த சமயங்கள். பிற்காலத்தில் மகாயான புத்தமும் ஈனயான புத்தமும் அரச குடும்பத்திலும் பாமர மக்களிடமும் பரவி வந்தன; அரசர் ஒரு தனி மறையை வரையறுத்துத் தழுவவில்லை. அவர்களுடைய மாளிகைகளில். பிராமணர் எப்பொழுதும் வழிபாடு செய்தே வந்தனர். இன்றும் கம்போதியாவின் தலைநகராகிய புனோம் பென்னில் (Phnom Penh) அப் பிராமணரின் வழித்தோன்றல்கள் அரச அரண்மனையில் சில வேளைகளில் வழிபாடு செய்து வருகின்றனர்.

கம்போதியாவின் கட்டடச் சிற்பக் கலைகளின் சின்னங்களைப் பார்க்கும் பொழுது, அவை தமிழ் நாட்டுக் கலைகளை எங்ஙனம் தழுவியவையெனும் வினா எழுவது இயல்பு. அங்கோரின் பெருமையும் பல்லவர் சோழரின் பரம்பரையும் ஒரே காலத்தவை. அங்கோர்வாட்டின் கோபுரங்களையும் கட்டட அமைப்புகளையும், திருமாலின் உருவங்களையும் யானைப் பீடத்தையும் ஆராயும் பொழுது, மாமல்லபுரம், காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலுள்ள கட்டடச் சிற்பக் கலையைக் கிமேரர் அறிந்திருக்கவேண்டுமென்ற நம்பிக்கை உறுதியாக உண்டாகிறது. மேலும் இவ்வரசரின் ''அன்'' விகுதி பெற்ற பெயர்களாகிய சயவர்மன், இந்திரவர்மன், சூரியவர்மன் போன்ற பெயர்கள் பல்லவ மன்னவருடன் எத்தகைய தொடர்பைக் கொண்டவர்களென்ற கேள்வியை எழச்செய்யும். கம்போதிய அரண்மனை நாட்டியங்கள் பரத நாட்டியத்துடன் தொடர்புள்ளவை. ஆயினும், இத்துறையில் ஆழ்ந்த ஆராய்ச்சி நிகழ்த்தாமலும் சீனம், கிமேர் போன்ற மொழிகளைப் பயின்று, தொடர்புள்ள நூல்கள் கல்வெட்டுகள் முதலியவற்றைப் பார்வையிடாமலும், முடிந்த துணிபைக் கூறுவது இயலாது.

அங்கோரை நிறுவிய கிமேரரின் வழித்தோன்றல்களைக் கண்டு பேசவேண்டுமென்று அவர்கள் வாழும் சில சிற்றூர்களுக்குச் சென்றேன். பிரெஞ்சு மொழி சிறிதறிந்த சிலருடன் உரையாடலானேன். ஆனால் அவர்கள் தாராளமாகப் பேசவில்லை. தம்மொழியில் குதிரையை ''மா'' வென்றும், கப்பலைக் ''கப்பால்'' என்றும் கூறுவதாகத் தெரிவித்தனர் இன்றும் அவர்களுடைய நிலைக்கும், அங்கோர் காலத்தில் அவர்கள் விளங்கிய நிலைக்கும் எவ்வளவு வேறுபாடு!

### தமிழோசை!

(வாணிதாசன்-ஈழம்)

ஒன்று படு தமிழா வென்
  றுரத்துக் கூறி—அவர் தம்
ஒருமைக் காய் குரல் கொடுக்கும், உலக
  தமிழர் குரலே—நீ,
வென்றெடுக்க வேண்டு மிந்த
  வுலக மெல்லாம்
வெளிப் படுவாய், செயற்படுவாய்
  வேக முடனே,
சென்றுலகின் இருள் நீக்கி
  ஒளியைப் பாய்ச்சி
செக மெல்லாம் தமிழோசை
செழிக்கச் செய்வாய்!

(2-ம் பக்கத் தொடர்ச்சி

தெலுங்கு மொழி

# மகா நாட்டில்

சிறீ ராமுலு.....

தும் உதவியது எனலாம்.

இந்த மகாநாட்டில் பீசி நாட்டைப் பிரதிநிதித்துவப் படுத்தி, எமது அப்பாப்பிள்ளை அவர்களின் மைத்துனர் திரு. சோமராசு அவர்கள் கலந்து கொண்டார்கள் அவர்மூலமாக, திரு. அப்பாப்பிள்ளை அவர்கள் பீசி நாட்டில் நம் இன மக்களுக்காகச் செய்து வரும் தமிழ்த் தொண்டைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. திரு. அப்பாப்பிள்ளை அவர்கள் தனக்காகவாழாது பீசி நாட்டுத்தமிழ்ச் சமூகம் எவ்வகையிலேனும் ஒன்றுபட்டு முன்னேறி, தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்று தனிமதிதராக நின்று பாடுபட்டுவருவதை அறிய முடிந்தது. பீசிவானொலி அதிகாரிகளுடன் போராடி பீசி வானொலியில் தமிழ் நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்பப் போராடி வெற்றி கண்ட இவர் தமிழர் கல்வி, பொருளாதார, சமய மறு மலர்ச்சிக்காகச் சளைக்காது போராடியும் வருகிறார். இவரது ஒரே இலட்சியம் பீசி வாழ் தென்னிந்தியர் அனைவரும் ஒரே திராவிட சமுதாயமாக ஒன்று பட்டு வாழ வேண்டுமென்பது தான்! இவரது இந்த நீண்ட முயற்சிகளின் பலனாக அங்குள்ள தென்னிந்தியர் அனைவரும் ஒன்றுபட்டு ஒரே அமைப்பின் கீழ் இயங்கி வந்ததாகவும் ஆனால் இராமகிருஷ்ண மிசனைச் சேர்ந்த வட இந்திய மடாதிபதிகள் இந்த நல்ல சூழ் நிலையைக் கெடுத்து வேண்டாத பல பிரச்சனைகளை இம் மக்களிடையே கிளப்பி, ஒன்றுபட்டிருந்த சமுதாயத்தைச் சிதறடித்து, அனைவரையும் இந்தி மொழி படிக்கவைக்கும் அளவுக்குக்



திரு. அப்பாப்பிள்ளை அவர்கள்

கொண்டுவந்து விட்டார்களாம். இதன் பலனாகத் தமிழ் மொழியைப் படிக்கும் தமிழர்கள் அருகி வருவதாகவும் காலப்போக்கில் இந்திமொழியே தமிழர் தாய்மொழியாகிவிடும் என்றும் கேள்வியுற்று மிகவும் கவலையடைந்தேன் சக்திவாய்ந்த இந்த வட இந்திய மடாதிபதிகளின் எதிர்ப்புக்களையெல்லாம் பொருட்படுத்தாது பாடுபட்டுவரும் இந்த அரும் பெருந்தலைவர் நம் அப்பாப்பிள்ளையைப் போற்றி, அவருடைய முயற்சிகளுக்கு ஊக்கமும் உற்சாகமும் தரவேண்டியது உலகத் தமிழர் கடமையாகும். திரு. அப்பாப்பிள்ளை அவர்களைப்பற்றித் தங்களுக்கு மிக நன்றாகத் தெரியும் என நம்புகிறேன் எனவே தங்கள் பத்திரிகையில் இது பற்றி எழுதி அவரது தொண்டுக்குத்துணை நிற்குமாறு வேண்டுகிறேன்.

இலங்கைக்கும் வர வேண்டுமென்று மிக விருப்புகிறேன். இந்த மடலை சென்னையிலிருந்தே எழுதுகிறேன். இதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளேன். இப்பொழுது இலங்கை வாழ் தமிழரிடையே புதிய ஒருமைப்பாடு ஏற்பட்டிருப்பதாக அறிய முடிந்தது. இந்த ஒற்றுமை நீடிக்கவேண்டும் என்பது எனது பிரார்த்தனை!

அன்புடன்
மு. சிறீராமுலு

# மலேசியாத் தமிழ்ப்பள்ளி

## மாணவர் கல்வி வளர்ச்சிக்காக ஒரு கோடி நிதி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் அதன் கீழ் இயங்குகின்ற ஆரம்பத் தமிழ்ப்பள்ளிகளுக்கும் வழங்குகின்ற திட்டவட்டமான ஆதரவாக அமையும் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

இந்த ஆரம்பத் தமிழ்ப் பள்ளிகளின் அமைப்புக்குத் தோற்றுவாய் வழங்கியவர் நமது பிரதமர் துன் அப்துல் ரஸாக் என்பதையும் அப்பெருமகனின் தலைமையில் அமைக்கப்பட்டிருந்த ரசாக் கல்விக் குழுவின் தீர்க்கமான ஆலோசனையின் பேரிலேயே ஆறு ஆண்டு தமிழில் பாடங்களைப் போதிக்கும் இத்திட்டம் வகுக்கப்பட்ட தென்பதையும் அந்தக் குழுவில் அங்கம் வகித்திருக்கும் இந்திய சமூகத்தின் மூத்த தலைவரான துன். வீ.தி. சம்பந்தன் திட்டவட்டமான முறையில் எடுத்து விளங்கியிருப்பது, தமிழ்ப் பள்ளிகளின் மீது தக்க காரணமின்றி விதைக்கப்பட்டுவிட்ட அவநம்பிக்கையையும் களங்கத்தையும் துடைத்தொழிக்கப் பெருந்துணை புரியும் என்று நம்புகிறோம். இது போன்றதோர் உறுதியான, தெளிவுமிக்க அறிக்கையை, ம. இ: கா: வின் தேசியத்தலைவர் அமைச்சர் டான் ஸ்ரீ மாணிக்கவாசகத்திடமிருந்தும் சமுதாயம் எதிர்பார்க்கிறது. ரஹமான் தாலிப் குழுவில் அங்கம் வகித்தவர் என்னும் முறையில் இன்றைய தமிழ்ப்பள்ளிகளின் அமைப்பைப் பலப்படுத்துவதற்கு டான் ஸ்ரீ மாணிக்க வாசகமும் உறுதுணையாக இருந்திருக்கிறார். ஆகவே இன்றைய குழப்பங்களையும் சந்தேகங்களையும் போக்கிச் சமுதாயத்தில் அமைதியையும் மனநிறைவையும் ஏற்படுத்துவதற்கு, ம. இ கா: தேசியத் தலைவர் தக்க விளக்கங்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

நேசன் ஆரம்பித்திருக்கும் தமிழ்ப்பள்ளி மாணவர் உதவி நிதி மூலம் தமிழ்ப் பள்ளி மாணவர்கள் தற்சமயம் எதிர் நோக்கும் பெரும் பகுதி இடர்ப்பாடுகளைக் களைந்து விட முடியுமென்பது எமது பெரு நம்பிக்கை. தமிழ்ப் பள்ளி மாணவர்களின் கல்வி மேம்பாடு சமுதாயத்தின் ஒரேகுரலாக— பேச்சாக — மூச்சாக நாடு முழுவதும் எதிரொலிக்க வேண்டுமென்பது எமது ஆசையாகும். தமிழ்ப் பள்ளிக் குழந்தைகளுக்குத் தேவைப்படுகின்ற சீருடை, சப்பாத்து, பென்சில் போன்ற துணைக் கருவிகள், நோட்டுப் புத்தகங்கள் அரசாங்கம் இலவசமாக வழங்கும் புத்தக உதவி தவிர்ந்த இதர உபரிப் புத்தகங்கள், போக்குவரத்து வசதி, மதிய உணவு முதலியவற்றுக்கு, இந்த உதவிநிதியைப் பயன் படுத்த எண்ணியிருக்கிறோம். இது தவிரத் தமிழ்ப் பள்ளிக் குழந்தைகளின் தேசிய மொழி, ஆங்கில மொழித் தேர்ச்சிக்குப் பல் வேறு போட்டிகள் நடாத்திப் பரிசுகள் வழங்குவதற்கும் தமிழ்ப் பள்ளிகளில் பயின்று பிரகாசமான தேர்ச்சி பெறுகின்ற பிள்ளைகள் தங்களின் கல்வியைத் தொடர்வதற்கும் இந்த நிதியிலிருந்து உதவி வழங்குவதற்கும் வகை செய்யப் படும்.

தமிழ்ப் பள்ளிக்குச் செல்வதால் எந்தப் பிள்ளையின் எதிர்காலமும் பாழாகி விட்டது என்னும் அவச் சொல்லுக்கு இடமில்லாத தனிச் சிறப்பான நிலையைத் தோற்றுவிக்க வேண்டும் என்பதே இந்த உதவி நிதியின் நோக்கமாகும். ஆகவே சமுதாயம் முழு மூச்சாகத் திரண்டு நின்று இந்த நிதியைப் பெருக்குவதில் முனைய வேண்டும் மென்று கேட்டுக் கொள்கிறோம்.

இப் பத்திரிகை, கண்டி செட்டி கார்டன்ஸ் 128/8—ம் இலக்க இல்லத்தில் வசிக்கும் இரா. கனகரத்தினம் அவர்களால் கண்டி, 98, திருகோணமலை வீதியிலுள்ள, சென்றல் அச்சகத்தில் அச்சிடப்பட்டு 26-5-75-ல் வெளியிடப்பட்டது.